உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.689/2023

பெயர் : குமார்(அ.சா.6)

தகப்பனார் பெயர் :ராசு

கணவர் பெயர் :

வயது :55

கிராமம் :கம்பூர்

வட்டம் :மேலூர்

தொழில் :விவசாயம், முன்னாள் கவுன்சிலர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

25.06.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 செல்வமணியை தெரியும். அவருடைய 2வது மனைவி மீனாட்சியை தெரியும். மீனாட்சி இறந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். இறந்தது தொடர்பாக நடந்த சண்டை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. சண்டை நடந்த போது கூட்டமாக இருந்தது அருகில் நாங்கள் நின்றோம். வேறு எந்த விபரமும் தெரியாது. (அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

கடந்த 03.06.2022ம் தேதி காலை 6 மணிக்கு செல்வமணி வீட்டில் முன்பகுதியில் உள்ள ஆஸ்பெஸ்டாஸ் இரும்புக்கம்பியில் மீனாட்சி தன் சேலையை கொண்டு தூக்கு போட்டு இறந்ததற்கு செல்வமணி தான் காரணம் என்று 1வது எதிரி வடிவேலு, அவருடைய மாமன்களான 2,3 எதிரிகளும், ஆலம்பட்டியில் இருந்து இருசக்கர வாகனத்தில் செல்வமணி

வீட்டிற்கு வந்து காலை 10 மணியளவில் 1வது எதிரி தன் கையில் வைத்திருந்த கத்தியால் செல்வமணியை என் அக்கா சாவுக்கு நீ தான் காரணம் இதோடு செத்து தொலைந்து போடா என்று சொல்லி கழுத்தில் ரத்தம் காயம் ஏறப்டுத்தியதை பார்த்து போலிசார் விசாரணையில் சொல்லியிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் உறவினர் என்பதால் அவருடன் சமாதானம் செய்து கொண்டு தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.06.25 18:21:47 +0530

Assistant Sessions Judge

Melur